பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 25 திங்கட்கிழமை [11-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 342

# இலங்கைக்கு உதவி வழங்க ஜேர்மன் அரசு நிபந்தனை

## மனித உரிமைகளைப் பேணுவது கட்டாயம் என வற்புறுத்து

கொழும்பு, நவம்பர் 11

மனித உரிமைகளைப் பேணுவது, எல்லா மக்களுக்கும் சட்டபூர்வ பாதுகாப்பை உறுதி செய்வது ஆகியவை உட்பட ஐந்து நிபந்தனைகளை ஸ்ரீலங்கா அரசு நிறைவேற்றினால் மட்டுமே அந்த நாட்டுக்கு எதிர்காலத்தில் உதவி வழங்க முடியும். இவ்வாறு ஜேர்மன் அரசு ஸ்ரீலங்காவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த ஜேர்மன் நாட்டின் அரச பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா அதிகாரிகளிடம் இதை நேரில் தெரிவித்தனர் என்று அறியவருகிறது.

ஜேர்மன் நாட்டின் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சின் விசேட தூதுக்குழுத் தலைவர் டாக்டர் ஹூப் பிரேயும் இந்த நிபந்தனை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சலப்பையாறில் புலிகள் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 11

திருகோணமலை மாவட்டம் சலப்பையாறு இராணுவ முகாமில் இருந்து குச்சவெளி இராணுவ முகாமுக்கு நேற்று முன்தினம் காலை 9-30 மணியளவில் ரோந்து சென்ற படையினர்மீது புலிகளிகள் மோர் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. [ஒ-3]

## பரந்தன் பகுதியில் விமானத் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 11

பரந்தன், குஞ்சுப்பரந்தன் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பரந்தன் சந்தியில் வீசப்பட்ட குண்டுக்கு கடை ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகவும் —

குஞ்சுப்பரந்தன் பகுதியில் வீசப்பட்ட குண்டுக்கு வீடு ஒன்று சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## தொப்பிகல காட்டில் பயங்கர குண்டுவீச்சு!

கொழும்பு, நவ. 11

அம்பாறை, தொப்பிகல காட்டுப் பகுதியில் மூன்று நாட்கள் பயங்கர குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன் முதல் சனிக்கிழமை வரை பொம்மர்களும், ஹெலிகளும் மாறி— மாறி இடைவிடாது— தாக்குதல்களை தொடர்ந்து நடத்தின என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், தொப்பிகல காட்டில் அமைந்திருந்த புலிகளின் பிரதான செயற்பாட்டு முகாம் மீது படையினர் குண்டு வீச்சு மற்றும் தாக்குதல்களை நடத்தினர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது. [ஒ-எ]

## பிரின்ஸ் குணசேகராவுக்கு 1 கோடி ரூபா மானநஷ்டம் லேக் ஹவுஸ் வழங்க பணிப்பு

### லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், நவ. 11

மான நஷ்ட ஈடாக சுமார் ஒரு கோடி ரூபா (ஒரு லட்சத்து 50 ஆயிரம் பவுண்) செலுத்தும்படி கொழும்பில் உள்ள — அரச சார்பான — லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு லண்டன் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

முன்னாள் ஸ்ரீலங்கா எம். பியும் பிரபல சட்டத்தரணியுமான பிரின்ஸ் குணசேகரா தாக்கல் செய்த மான நஷ்ட வழக்குத் தொடர்பாகவே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

1990 ஆம் ஆண்டு மே 17 ஆம் திகதி "டெயிலிநியூஸ்" பத்திரிகையின் நடுப்பக்கத்தில் வெளியான கடிதம் ஒன்றில் தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் வெளியானதாகத் தெரிவித்து அவர் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

தென்னிலங்கை தீவிரவாதிகளுக்கு ஆதரவாகவும், ஸ்ரீலங்கா படையினரின் அட்டூழியங்களுக்கு எதிராகவும் ஸ்ரீலங்கா நீதிமன்றங்களில், முன்னர் ஆஜராகி வந்தவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் நிறுவனம் யாழ். வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரண உதவி

### கூட்டுப்படை அனுமதிக்குமா?

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ் போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசசார்பு நிறுவனம் ஒன்று, நவீன மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இந்த உபகரணங்களை வடக்கே கொண்டுவருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும்—

அதற்கான உபகரண விவரப் பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு இந்த உபகரணங்கள் மிக அவசரமாகத் தேவைப்படுவதாக பிரிட்டிஷ் தூதரகமும் பாதுகாப்பு அமைச்சிடம் எடுத்துரைக்க செய்துள்ளதாக அறியவருகிறது. [ஒ-3]

### முச்சந்தி முரளி



அப்ப... டிக்கியிலை டிமிக்கி குடுத்திருக்கினம் போலை...!

## படையினர் மீது ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 11

மன்னார் மாவட்டம் சித்தான்குறிச்சியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## டிசம்பரில் "சார்க்"

கொழும்பு, நவ. 11

உத்தேச ஒரு நாள் சார்க் மாநாடு எந்த மட்டத்தில் நடத்தப்படவேண்டும் என்பது குறித்து இன்னும் முடிவு காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தில் இணக்கம் காணப்பட்டால் டிசம்பர் நடுப்பகுதியில் இந்த மாநாடு நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [உ-ற]

## வலி. வடக்கில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 11

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் ஹெலி ஒன்று பரவலாகக் கலிபர் தாக்குதலை நடத்தியது.

கீரிமலை நச்சன்காட்டு முகாமில் இருந்து நேற்றுப் படையினர் குடியிருப்புகளை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். [ஒ-3]

## பாடசாலையில் படையினர்!

யாழ்ப்பாணம், நவ. 11

திருகோணமலை மாவட்டம் சம்பூர் இலக்கந்தை இராணுவ முகாமில் இருந்து கடந்த 8ஆம் திகதி வெளியேறிய படையினர் கோணத்தீவு பாடசாலையில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## புலிகளின் பதில்: உற்சாகம் தருகிறது என்கிறார் தொண்டா

கொழும்பு, நவ. 11

விடுதலைப் புலிகள் எழுதிய பதில் கடிதம் தமக்கு உற்சாகத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது என்று அமைச்சர் தொண்டமான் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

அமைதிப் பேச்சுக்களை நடத்த சில பரிந்துரைகளை விடுதலைப் புலிகள் அக்கடிதத்தில் தெரிவித்திருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

ஆனால் அந்தப் பரிந்துரைகள் பற்றிய விவரத்தையோ அல்லது புலிகளின் பதில் கடிதத்தையோ கொழும்புப் பத்திரிகைகளுக்கு அவர் வெளியிடவில்லை.

பேச்சு நடத்த தாங்கள் தயார் என்பதை பதில் கடிதம் மூலம் புலிகள் தெரிவித்திருக்கின்றனர் என்று தொண்டமான் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

புலிகள் பதில் கடிதம் எழுதியிருப்பதை அடுத்து இந்த விடயம் குறித்து அரசுடன் பேசுவதா என்பது குறித்து தான் இன்னமும் முடிவு செய்யவில்லை என்றும் அவர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார். [உ-எ-10]

## 42 படையினரின் உறவினர்களும் யாழ். வர இன்னும் அனுமதி இல்லை

கொழும்பு, நவ. 11

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலீஸ் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த 42 பேரையும் அவர்களது குடும்பத்தவர்கள் யாழ்ப்பாணம் சென்று சந்திப்பதற்கு சிறிலங்கா அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை.

அரசின் அனுமதிக்காக உறவினர்கள் காத்திருப்பதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 பேரையும் அவர்களின் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் சென்று பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியிருக்கின்றனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

## 21-27 வரை மாவீரர் வாரம்; பரந்த அளவில் ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ. 11

மாவீரர் வாரம் இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மிகவும் பரந்த அளவில் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்பட உள்ளது.

மாவீரர் வாரத்தைக் கொண்டாடும் முகமாக இப்போதிருந்தே அலங்கார வேலைகளும் ஏனைய ஏற்பாடுகளும் கிராமம் கிராமமாக, நகரம் நகரமாக ஆரம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கணவனுடன் கார் 'டிக்கி'யில் ஒளித்து நோர்வே சென்ற தமிழ்க் கர்ப்பிணி!

ஒஸ்லோ, நவ. 11

இலங்கையைச் சேர்ந்த தமிழ்த் தம்பதியரைத் தமது காரின் "டிக்கி"க்குள் மறைத்துவைத்து நோர்வேக்குள் கடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் ஜேர்மன் தம்பதியருக்கு மூன்று மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட தமிழ்த் தம்பதியர்கள் நோர்வே நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் ஜேர்மனிக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஜேர்மனியின் வெயில் துறையில் இருந்து புறப்பட்டு ஒஸ்லோவுக்குச் சென்ற கப்பலில் கார் ஏற்றப்பட்டு கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவம் பற்றிய விபர

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் ஆங்கில மருந்தகம் ஒன்றுக்கு ஐம்பது வயதுக்கு மேற்பட்ட சமையற்காரர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும்: இல 366 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (18716)

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் ஆங்கில மருந்தகம் ஒன்றுக்கு ஆங்கில மருந்து வகைகளில் நன்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் ஒருவர் தேவை. நகர எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: இல 365, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (18715)

## விற்பனையாளர் தேவை

புத்தகசாலை ஒன்றுக்கு விற்பனையாளராக கடமையாற்ற பெண் விற்பனையாளர் உடன் தேவை. தொடர்பு: Happy Tailors, சிவவிளங்கடப்புளியடி, (யாழ் இந்துக் கல்லூரி அருகாமையில்) யாழ்ப்பாணம். (18446)

## றோனியோ

தட்டெழுத்து றோனியோ வேலைகள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கு அருகாமை (றோனியோ பேப்பர் விற்பனைக்குண்டு). (இ/0782)

## தவறிவிட்டது

4/10, புதிய வீடமைப்புத் திட்டம், யாழ்ப்பாணம் என்னும் ஆங்கில முகவரியிட்ட கடிதம் ஒன்று 9-11-1991 அன்று பாஷையூர் மீன்வாடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எஸ் ஆசீர்வாதம், 21, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (18713)

## இடமாற்றம்

வேலணை வைத்திய கலாநிதி இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சைகளைத் தொடர்கிறார். சகல நோயாளர்களும் வழமை போல் சிகிச்சை பெறலாம். இடம்பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும். (18590)

திவலத்தில் வளர்ந்து வந்த வேலணை புங்குடுதீவில் செயல்பட்டு வந்த 'பாலர் ஜெயம் குழந்தைகள்' வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து 1-ம் தெருவில் உள்ள இருபாலைச் சந்தி குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். (18700)

---

நெல்லியடி
தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயம்
கந்தசஷ்டி 5 ஆம் நாள் விழா
இன்று மாலை 5 மணிக்கு

## அனுபூதி

என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

நிகழ்த்துபவர்:- திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)

அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தர்மகர்த்தா சபை

[4360]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 05 — 1926

மறைவு: 27 — 10 — 1987



### அமரர் த. தருமலிங்கம்

[யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, ஓய்வு பெற்ற அதிபர்]

திதி: 11—11—1991

என் அன்புத் தெய்வமே! ஆருயிரே! உங்கள் உடல் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு நான்காய் விடினும், உயிர் என் கண்முன்னே காட்சியளிக்கிறது. தையல் தய்ப்பாசம் தலை தூக்க என்னைவிட்டுப் பிரிந்து வந்தீர்களே! காலக்கொடுபிடியில் நமனார் உங்கள் உயிரைக் கவர்ந்தனரே. ஆண்டு நான்கும் என் கண்ணீர் நான்கு ஆறாக ஓடுகிறதையா. உங்கள் புன்முறுவல் தவழும் எழில் வதனம் காணாதும், அன்பு வார்த்தை கேளாதும் தவிக்கும் எனக்கு, ஆறுதல் அளிக்க இவ்வுலகில் உங்களையன்றி வேறு யாருளரையா. உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடி வருந்தும்:
அன்பு மனைவி,
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

தருமபதி,
கே. கே. எஸ். றோட்,
கொக்குவில்.

[18670]

---

## கம்பியூட்டர் கல்வி

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:

13 - 11 - 1991 (திங்கள், புதன், வெள்ளி)
16 - 11 - 1991 (சனி ஞாயிறு)

### யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[இ-0785]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1933 — 11 — 27



இறப்பு: 1988 — 11 — 14

### திருமதி சோதிப்பெருமாள் சரஸ்வதி

திதி: 1991 — 11 — 11

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

'சரஸ்வதி மகால்',
இணுவில்;

[18717]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### சுந்தரம்பிள்ளை திருச்செந்தூர்நாதன்

(சந்திரன்)

அன்னை மடியில்: 22 4 1964
இறைவனடியில்: 14-11-1988

திதி: 11-11-1991

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது

உன் நினைவுடன் வாழும்,
குடும்பத்தினர்.

காரைக்கால்,
இணுவில் கிழக்கு

(இ/0887)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 0 — 02 — 1961



மறைவு: 12 — 10 — 1991

திருமதி

### சறோஜினிதேவி ஆதிமூலம்

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு விட்டாய்.
தேறுதல் சொல்ல வகையின்றி தவிக்கின்றோம்
மறந்து உன்நினைவு எம் உள்ளமதில்.
இன்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறும்.

கணவர், மகன்,
மற்றும் குடும்பத்தினர்

ஆதிமூலம்
(விடவளர்)
புனர்நிர்மாண நிலைய வீதி,
கொடிகாமம்.

[18711]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 03 — 1968

மறைவு: 12 — 10 — 1991



செல்வி

### தேவராசா செல்வராணி

எங்கள் வீட்டுச் செல்வமே!
எங்கள் குடும்பத்தின் செல்வியே!
இன்று நீ சென்று விட்டாய் செல்வியாக
என்று நம் துயர் தீருமோ
என்று சொல்ல முடியவில்லை செல்வமே!
இன்று உன் பிரிவை நினைத்து
ஏங்கி நிற்கும் நெஞ்சங்கள் தான் எத்தனை
அத்தனையும் உன் ஆத்மா சாந்தியை
வேண்டி நிற்கும் இதயங்கள்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்.

G P S. றோட்,
கல்வியங்காடு.

[18709]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பந்து வந்தால்...

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமிழர்களையும் அவர்களின் பிரச்சினைகளையும் எப்படிப் பார்க்கின்றன? எவ்வாறு நோக்குகின்றன?

இப்போது பதில் எதிர்க் கட்சித் தலைவராகப் பதவி வகிக்கும் திரு. அனுரா பண்டாரநாயக்கா இதற்கான சரியான பதிலைத் தெரிவித்திருக்கிறார்.

தென்னிலங்கைக் கட்சிகள் தேர்தலை முன் வைத்தே தமிழர்களையும், அவர்களின் பிரச்சினைகளையும் நோக்குகின்றன என்ற உண்மையை அனுரா வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார்!

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்தால் அதில் வெற்றி பெறுவது யார் என்பதை தமிழர்களின் வாக்குகளே நிர்ணயிக்கும். இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மறந்து விடவில்லை. இதனைக் கருத்தில் கொண்டே நாம் தமிழர்களின் அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் — என்று அவர் உண்மையை உரைத்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் பக்கம் சார்ந்துள்ள மக்களின் வாக்குகளை ஜனாதிபதி இழக்கப் போகிறார். அதனை ஈடு செய்வதற்காகத் தமிழர்களின் வாக்குகளைத் திரட்டுவதற்காகவே அவர் இப்போது தமிழ்ச் சமூகத்தினரின் பக்கம் திரும்பியிருக்கிறார்— என்பதையும் திரு. அனுரா சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி அடைவதற்கு மட்டுமல்ல. அரசாங்கத்தை அமைப்பதற்கே தமிழர்களின் வாக்குகள் தேவைப்பட்ட காலமும் ஒன்று இருந்தது.

சுமார் 20 வருட காலமாக தமிழர் ஆதரவின்றியே பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கும் சூழ்நிலை தெற்கில் தோன்றியது. ஆனால் அவர்களிடையே போட்டி பெருகி பிளவுகள் மலியும்போது மீண்டும் தமிழர் வாக்குகள் தேவைப்படும் நிலை அரும்புகிறது.

தமிழர்களின் வாக்குகளும், ஆதரவுகளும் தேவைப்பட்டிருந்த வேளைகளில் கூட, அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தச் சிங்கள அரசியல் கட்சியும் விசுவாசமாக நினைத்ததில்லை. அதனை, தமக்கு அரசியல் லாபம் தேடும் விதத்தில் துஷ்பிரயோகம் செய்ன. மொத்தத்தில் பல வகைகளிலும் பல தடவைகளிலும் தமிழர்களை ஆசை காட்டி மோசம் செய்து வந்தன. அல்லது சுத்தமாக ஏமாற்றி வந்தன.

இப்போதும் கூட, பிரேமதாசாவானாலும் சரி, அனுராவானாலும் சரி, அத்துலத்முதலியானாலும் சரி தமிழர்களைத் தமது வாக்குத் தேவைக்குப் பயன்படுத்திவிட்டு, பின்னர் எட்டி உதைக்கும் உள்நோக்கத்துடனேயே செயற்படுவர் என்பதில் ஐயமில்லை.

எனவே, சிங்களக் கட்சிகள்-சிங்கள அரசியல்வாதிகள்-தமிழர்களின் ஆதரவு தேவை என்று நாடி வரும் போது, தமிழர்கள் வெகு கவனத்துடனும், மிகுந்த ராஜதந்திரத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். அற்ப சலுகைகளுக்கு ஆசைப்பட்டு இனத்தையும், உரிமைகளையும் அடகு வைக்காது தமிழன் சுயமரியாதையுடனும், தன்னாட்சி உரிமையுடனும் வாழ வழி செய்யும் விதத்தில் ராஜதந்திரோபாயங்களைக் கையாள்வது மிகமிக அவசியம். பந்து எங்கள் பக்கம் வந்தால் அதனை நுணுக்கமாகவும் விரைவாகவும் "கோலு"க்குள் போட்டு வெற்றிபெறவேண்டும் அதுவே கெட்டித்தனம்!

## வடக்கு பல்கலை கல்லூரி; இப்போது சாத்தியம் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 11

"வடக்குக்கான பல்கலைக்கழகக் கல்லூரி முன்னர் அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதற்கு சாத்தியம் இல்லை."

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் பல்கலைக்கழகக் கல்லூரி இம்மாதம் 20 ஆம் திகதி முதல் இயங்கும் என ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன்படி வடக்குக்கான கல்லூரியை வவுனியாவில் நிறுவ முடிவு செய்யப்பட்டது. ஆனால் அங்கு இடம் தெரிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கல்லூரிக்கு விரிவுரையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் மாணவர்களை அனுமதித்தல் ஆகிய விடயங்கள் குறித்து எந்த வித அறிவித்தலும் யாழ். பல்கலைக்கழகத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ஓ 3)

## பதுளையில் 3 இளைஞர்கள் எரிப்பு!

பதுளை மாவட்டத்தில் கடந்த மாத இறுதியில் மூன்று இளைஞர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களின் சடலங்கள் ஆங்காங்கே எரிக்கப்பட்டன.

இ.ந. மனித உரிமைக் குழுவினர் இலங்கையில் தங்கியிருந்த போதே இவ்விளைஞர்கள் கடத்திச்செல்லப்பட்டு, கொலைப்பட்டனர் என்று அம்பத்தோட்டை மாவட்ட சுதந்திரக் கட்சி எம்.பியான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ஓ-ஏ)

## நுணாவில் பகுதியில் ஹெலித் தாக்கு

தென்மராட்சி, நவ. 11

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி தனங்கிளப்பு வயிலிலும் நுணாவில் பகுதியிலும் சென்ற வாகனங்கள் மீது ஹெலியிலிருந்து கனிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

சாச்சேய் துறைமுகத்தில் நின்ற படகுகள் மீதும் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. [உ-117]

## விபத்தில் இருவர் படுகாயம்

தென்மராட்சி, நவ. 11

வீதியில் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டியை கடந்து செல்ல முயன்ற சைக்கிளோட்டி எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி காயமடைந்தார். மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த சிறுமியும் தூக்கி வீசப்பட்டு காயமுற்றார்.

தென்மராட்சி பகுதியில் கல்வடிமுடு என்ற இடத்தில் நடந்த இந்த விபத்தில் படுகாயமுற்ற இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் (ஓ-117)

## முதல் ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா இந்திய அணியிடம் தோல்வி!

முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி இந்தியாவிடம் 3 விக்கட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணியினர் 47 ஓவர்களில் 8 விக்கட்டுகள் இழப்பிற்கு 177 ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி 41 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றதன் மூலம் ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி வீரர் டெண்டுல்கரும், தென் ஆபிரிக்க வீரர் டொனால்ட்டும் ஆட்டத்தின் சிறப்பு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இன ஒதுக்கல் கொள்கையர் காரணமாகக் கடந்த 21 ஆண்டு காலமாக சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க அணி மீண்டும் பங்குபற்றிய முதல் சர்வதேச ஆட்டம் இதுவாகும். (உ-ஏ)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி சிகிச்சைகள் மல்லாகத்தில்

யாழ்ப்பாணம், நவ. 11

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் சில சிகிச்சை ("கிளினிக்") பிரிவுகள் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நேற்று முன்தினம் முதல் இயங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் பொது மருத்துவ "கிளினிக்"குகளும் வியாழக்கிழமைகளில் குழந்தைகள் "கிளினிக்"குகளும், சனிக்கிழமைகளில் சலரோக "கிளினிக்"குகளும் காலை நேரங்களில் இயங்கவுள்ளன.

இதேவேளை, திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஏனைய வைத்தியசாலையின் கிளையும் இங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## உணவுப் பொருள் தட்டுப்பாடு குறித்து ஆணையாளர் நேரில் ஆராய்வார்

அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து நேரடியாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க இருக்கிறார். தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர் யாழ்ப்பாணம் வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து ஆராய வதற்காக இரண்டு கூட்டங்களை அவர் நடத்தவுள்ளார். நாளை யாழ். செயலகத்தில் நடைபெறும் இக் கூட்டங்களில் ஒன்றில், அரச அதிகாரிகளும், மற்றைய தில் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து, தாம் தயாரிக்கும் அறிக்கையை கொழும்பு திரும்பியதும் அவர் அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பார் என்று தெரியவருகிறது.

## பாடசாலை அதிபர்கள் சிலர் இன்று முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகள் இடையேயும், பாடசாலை அதிபர்கள் இடையேயும் இடமாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்று முதல் நடைமுறைக்கு வரக்கூடியதாக இந்த இடமாற்றங்களை வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் செய்திருக்கிறார்.

இடமாற்றங்கள் விவரம் வருமாறு:-

யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பி. நாகராசா யாழ். நவலர் மகா வித்தியாலய அதிபராக—

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி பி. எஸ். ஸ்கந்தராசா யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபராக—

கோண்டாவில் கோட்டக் கல்வி அதிபர் திருமதி ஜெயராஜா நல்லூர் கோட்டக் கல்வி அதிபராக—

கோண்டாவில் இராமகிருஷ்ணா கோட்டக்கல்வி அதிபர் திரு. ரி. தாணையா பதவி உயர்வுடன் யாழ். கல்வித் திணைக்கள திட்டமிடல் பகுதிக்கு—

கோப்பாய் மகா வி. அதிபர் திரு. க. கனகசபாலிங்கம் கோண்டாவில் இராம கிருஷ்ணா கோட்டக்கல்வி அதிபராக—

நல்லூர் கோட்டக்கல்வி அதிபர் திரு ஐ. மனோகரன் பதவி உயர்வுடன் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுக்கு—

யாழ். கல்விக் கோட்டத்தில் நிர்வாகத்துக்கு பொறுப்பாகவிருந்த திரு. கி. வே. மகேசுவலிங்கம் மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்கு மேலதிக பிரதிக் கல்விப் பணிப்பாளராக—

யாழ். கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. திரு. என். சுந்தரலிங்கம் வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராக—

மருதனார்மடம் தொலைக்கல்விப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. வி. ரி. செல்வரத்தினம் சிதம்பராக் கல்லூரி அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளனர் (உ)

## 1 கோடி ரூபா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரின்ஸ் குணசேகரா.

இதே போன்ற வழக்குகளில் ஆஜரான சட்டத்தரணி லியனாராய்ச்சி கொழும்பில் மாமமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

அதனை அடுத்து, தமது உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என சட்டத்தரணி பிரின்ஸ் குணசேகர வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திர அமைப்பின் அங்கத்தவரான லண்டன் நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளித்து நஷ்ட ஈட்டுத் தொகையை லேக் ஹவுஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுத் தரும் என பிரின்ஸ் குணசேகரா நம்பிக்கை தெரிவித்தார். [உ-10]

## 21 - 27 வரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்துவிட்டன.

மவீரர் வாரத்தை பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிலும்—

சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றிலும்—

நிர்வாகச் செயலகங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றிலும்—

விடுதலைப் புலிகளின் பாசறைகள், இயக்கச் செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேசப் பிரிவுச் செயலகங்கள் ஆகியவற்றிலும்— மிகவும் பிரமாண்டமான அளவில் கொண்டாடுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை தேசியக் கொடியேற்றத்துடன் மாவீரர் வார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் 27 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு பிரதேசங்கள் தோறும் நடைபெறும் மாவீரர் நினைவுக் கூட்டத்துடன் விழா நிறைவு பெறும்.

## கணவனுடன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மவது:-

இலங்கையைச் சேர்ந்த தம்பதிகளான இரத்தினம் கருணாகரன், திருமதி தர்ம மாலா கருணாகரன் ஆகியோர் கொழும்பில் ஏஜன்சி ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா பணம் செலுத்தி ஜேர்மன் சென்றடைந்தனர். திருமதி தர்மமலா எட்டு மாதக் கர்ப்பிணி ஆவர்.

ஜேர்மனியின் வீதியில் தமமை அணுகி தமிழ்த் தம்பதிகள் நேர்மேக்குக் கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்திய தாகவும், காரைக் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அதன் "டிக்கி"க்குள் ஏறி ஒளிந்து கொண்டனர் என்றும் ஜேர்மன் தம்பதியர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஆனால் விசாரணையின் போது ஜேர்மன் தம்பதியர் மிடம் 8 ஆயிரம் குரோனர் (சுமார் 45 ஆயிரம் ரூபா) பணத்தைக் கொடுத்து ஒஸ்ற பிரயாணத்தை ஒழுங்கு செய்து கூட்டிக்கொண்டு வந்ததாக தமிழ்த் தம்பதியர் தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட ஒஸ்லோ நீதிமன்றம் ஜேர்மன் தம்பதியருக்கு இந்தத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவரின் சடலம் ஒதுங்கியது

நாகர்கோவில், நவ. 11

வடமராட்சி கிழக்குக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் காணாமற் போனதாகக் கருதப்பட்ட ஒருவர், சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலம் நேற்று நாகர்கோவிலில் கரை ஒதுங்கியது.

உடுத்துறையைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சந்திரகுமார் [சாந்தன்] என்பவரே இறந்தவர் ஆவார்.

கட்டுமரத்தில் இவருடன் மீன் பிடிக்கச் சென்ற மற்றொருவர், கடற்படைக் கப்பலைக் கண்டவுடன், நீந்தி தப்பி வந்துவிட்டார் என்பது தெரிந்ததே.

இவர்கள் சென்றிருந்த கட்டுமரம் சேதமடைந்த நிலையில் ஏற்கனவே கரை ஒதுங்கி விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [ஓ-14]

## இலங்கையில் 'எய்ட்ஸ்' தீவிரம்

இலங்கையில் 'எய்ட்ஸ்' நோயினால் பிடிக்கப்பட்டோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

தற்போது இங்கு ஆயிரத்து 400 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த எண்ணிக்கை 880 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கந்தசாமி கிஸ்ணகுமாரி

இல 75 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் G.A.Q. மாணவியுமான செல்வி கந்தசாமி கிஸ்ணகுமாரி (1991 11-10) நேற்று சிவபதம் அடைந்தார்.

இவர் ஏ. சி. கந்தசாமி தெய்வானை அவர்களின் அன்புக் கனிஷ்ட புத்திரியும், கோகிலகுமாரி, குமாரதாசன், கணேசதாசனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (1991-11-10) நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ. சி. கந்தசாமி
இளைப்பாறிய அஞ்சல் அலுவலக கண்காணிப்பாளர்

75, பருத்தித்துறை, வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (18447)

### மீனாட்சிப்பிள்ளை சுப்பையா

மீசாலை தெற்கு அமரர் திரு. பரமு சுப்பையா அவர்களின் அன்புப் பாரியார் மீனாட்சிப்பிள்ளை 10-11-1991 பிற்பகல் 12-30 மணியளவில் சிவபதமடைந்தார். அன்னார் இராசம்மா, செல்வரத்தினம் (ஆசிரியை), காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் பாலசிங்கம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் தம்பித்துரை, விமலாதேவி, சியாமளா, சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்ஜினி சுபஜினி, பிரசன்னா, கவிதா, நிருபன், பிரதீபன், அர்ச்சுனா, ஜீவிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-11-1991) திங்கள் முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
டாக்டர் வே. தம்பித்துரை.

மீசாலை தெற்கு,
மீசாலை. [18718]

### அருட்செல்வி
### சென்மா கிறேற் நீக்கிலாப்பிள்ளை

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பச் சபையைச் சேர்ந்தவருமாகிய அருட்செல்வி சென்மா கிறேற் நீக்கிலாப்பிள்ளை அவர்கள் பாஷையூர் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் [10 11-91] நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு [11-11-91] இன்று பிற்பகல் 4 00 மணிக்கு யாழ். புனித செஞ்சேசுசபை மாதா ஆலயத்தில் திருப்பலியுடன் நடைபெறும்.

தகவல்:
மாகாணத் தலைவி

திருக்குடும்ப மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (18448)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ் மாவட்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் செயலகத்தில் நடைபெற இருக்கிறது. (ஓ-8)

## அதிபர்களுடன் கலந்துரையாடல்

மாவீரர் வாரம் தொடர்பான பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல் வரிசையில், நாளை மறுதினம் (புதன்) பண்டத்தரிப்பு, மருதனார்மடம் ஆகிய இடங்களில் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும்—

மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் கலந்துரையாடல் இடம்பெறும். (ஓ)

## இலங்கைக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்கு விவரித்தார்.

★ மனித உரிமைகளை மதிக்கவேண்டும்.

★ அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் நடைமுறையில் மக்களின் முழுப் பங்களிப்பு இடம்பெறவேண்டும்.

★ மக்களுக்கு சட்டபூர்வ பாதுகாப்பை வழங்கவேண்டும்.

★ சந்தைப்படுத்தும் பொருளாதார முறையை உருவாக்கவேண்டும்.

★ அரசின் நடவடிக்கைகள் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு அமையவேண்டும்.

—இந்த ஐந்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் நாடுகளுக்குத்தான் எதிர்காலத்தில் அபிவிருத்திப்பணிகளுக்குத் தேவையான நிதி உதவியை ஜேர்மன் அரசு வழங்கும் என்று அவர் ஸ்ரீலங்கா அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் மனித உரிமை மீறல் குறித்து சட்ட நடவடிக்கை எடுப்பது ஆகிய பொறுப்புகள் ஸ்ரீலங்கா அரசுக்கு உண்டு என்பதையும் ஜேர்மன் குழு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களின்போது வலியுறுத்தியது. [உ-எ]

## காரைநகர் மாணவருக்கு

இடம்பெயர்ந்த காரைநகர் கோட்டத்தணியைச் சேர்ந்த 14 பாடசாலை மாணவர்களுக்கான மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் காலை 9 00 மணி தொடக்கம் விநியோகிக்கப்படும்.

### தவறான பெயர்

நேற்றைய உதயனின் 4 ஆம் பக்கத்தில் வெளியான நினைவஞ்சலி விளம்பரத்தில்—

நினைவுக்குரியவரின் பெயர் சுந்தரம் வைகுந்தநாதன் என்பதாகும். தவறுதலாக மகேந்திரநாதன் எனப் பிரசுரமாகிவிட்டது.

தகவல்: விளம்பரதாரர்
(C/0891)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காவலர் வீதி, 292/2 இலக்கத்தில் ... 11-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தானிய வகை கொள்வனவு

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தகர்களிடம் இருந்து தானிய வகைகளை ப.நோ.கூ. சங்கங்கள் கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளன. இவை மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவிருக்கின்றன.

பாவனையாளர்கள் பாதுகாப்புக் குழு பிரதிநிதி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.


★ தொழிற்பயிற்சிகள் ★

★ Computer Programming in Basic Language
(80 மணித்தியாலம் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்)
★ Diploma in English
★ Hotel Management
★ N. C. E.
★ Toefl
★ Spoken English
★ Basic English

★ ஆசிரியர்: திரு. SAM

★ றேடியோ, T. V., வீடியோ டெக் திருத்துதல்
★ றீவைண்டிங்
★ எலெக்ரிக்கல் வயறிங்
★ Engineering Drawing

1 ஆம் வருட பொறியியல் பீட மாணவர்களுக்காக விசேடமாக பயிற்சி அளிக்கப்படும்.

★ Diploma in Draughtsmanship
★ Air Condition and Refrigeration - Engineering

சகல தொழிற்பயிற்சிகளுக்கும் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்: 16-11-91

விபரங்களுக்கு:-
Jaffna Technical Institute,
ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

இல. 4, பிள்ளையார் லேன்,
(காக்கைப்பெட்டி சந்திக்கு அருகாமை)
திருநெல்வேலி. (18714)


## மரண அறிவித்தல்கள்

### சிவக்கொழுந்து இராசரத்தினம்

சிவக்கொழுந்து இராசரத்தினம் (இளைப்பாறிய D.O.A., A.C.L.G., யாழ்ப்பாணம்) நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசையா - தனம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், குமுதினி (மருத்துவ மாணவி, பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா), சிறிரங்கன் (சென். ஜோன்ஸ் கல்லூரி, உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராஜா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இரா. குணேந்திரன்

சங்கிலி தோப்பு,
முத்திரைச் சந்தை,
யாழ்ப்பாணம். (18449)

### தம்பிப்பிள்ளை முத்துத்தம்பி

தம்பிப்பிள்ளை முத்துத்தம்பி அவர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் ஸ்ரீ விக்னேஸ்வரன் (உப அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), மங்களேஸ்வரன், பரமேஸ்வரன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சங்கானை) விக்கினேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, முத்தீஸ்வரி, கமலேஸ்வரி, விமலேஸ்வரி, தியகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவனேஸ்வரி, யோகராணி, ரவிச்சந்திரிகா, பாலசுப்பிரமணியம், பாலச்சந்திரன், பவானந்தன், இராஜராஜேஸ்வரன் (கிராம அபிவிருத்தி அதிகாரி, சாவகச்சேரி), ஜெகநாதன், இரத்தினசிங்கம், தர்மானந்தன் (நியூ ஆனந்தாஸ், யாழ்ப்பாணம்), சிவநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை [11-11-1991] பிற்பகல் 1 00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு "ஈஸ்வர இல்லம்", மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் இருந்து எடுத்துச்செல்லப்படும்; இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்.

தகவல்;
மு. ஸ்ரீ விக்கினேஸ்வரன்

"ஈஸ்வர இல்லம்",
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (18450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org